முருகப்பெருமான் துணை

**மகான் ஜனக்குமாரர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.07.2023, செவ்வாய்கிழமை

1. கருணாமூர்த்தியே ஞான தேசிகா
   கலியிடர் வெல்ல வந்த நல்
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது மிதுன திங்கள்
   குறைவிலா மூவாறோர்திகதி குசன் வாரம்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 19 ம் நாள், 04.07.2023, செவ்வாய்கிழமை)

   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகன் கேட்க ஜனக்குமாரர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உலகை நல்வழி நடத்திட
   ஞானம் அருளவந்த அரங்கன்
   ஞானிகள் பூசை வழிமுறைகளை
4. முறையாகப் பின்பற்றி மக்கள்
   முழு சரணாகதி கொண்டுவர
   மறைபோற்றும் அரங்கனின்
   மாதவ பலத்தை வரமாக அடைந்து
5. அடைந்து முழுமை கொண்டிட
   ஆசான் அரங்கனே கலியின்
   சோடை போக்கும் ஞானியென
   சூட்சும பலம் அறிந்து தெளிந்திட
6. தெளிந்திட உலக மக்கள்
   தேசிகன் குடிலை நாடிவர
   அழியாமை தரும் ஞானதீட்சை
   அரங்கன் கரம்பட அடைந்து வர

7. வருகவே வையகம் தன்னில்
வரமாக குருவருள் பலம்
முருகப் பெருமான் ஆசிபடவே
முழுமைபட மாற்றம் தனை தரும்

8. தருகவே உலக மக்களிடை
தயவுநெறியும் நிலைத்து
வறுமை இல்லா உலகம்தனை
வருங்காலம் படைக்கும் ஆற்றல்

9. ஆற்றல் பெருகி இனிதே
அறிவிப்பேன் உலக மாற்றம்
மாற்றம் அரங்க மகானால்
மண்ணுலகம் கண்டுத் தேறும்

10. தேறும் சர்வ வல்லமையாக
தெரியவரும் நல்லத்தலைமை
ஆறுமுகனை ஏற்றவர் வழி
ஆளுமைதனை அகிலம் கண்டு

11. கண்டுமே ஞான ஆட்சி
கலியினில் அரங்கன் விருப்பமாக
உண்டாகும் சடுதி மாற்றம்
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–